இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 159 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 06 – ஞாயிற்றுக்கிழமை 19 ஜனவரி 2025 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 159 : Thiruvalluvar Year - 2056 - Thai 06 - Sunday 19 January 2025 - Madurai 8 Pages ₹ 5.00

## 60—க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற

# சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா - 2025 !

## நிறைவு விழாவில் நூல்களை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகளை வழங்கினார்!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா – 2025 நிறைவு விழாவில், 2023 மற்றும் 2024–ஆம் ஆண்டுகளுக்கான மொழி பெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை வெளியிட, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சசி தரூர் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, அமெரிக்க எழுத்தாளர் தாமஸ் ஹிடோஸி ப்ருக்ஸ்மா, இத்தாலி பொலோனியா புக் ப்ளஸ் இயக்குநர் திருமதி ஜாக்ஸ் தாமஸ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது நூலக இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இந்தியா மற்றும் பன்னாட்டு பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜன. 19 -**

**சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா நிறைவு விழாவில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்கள் மற்றும் மொழி பெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு, பதிப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பதிப்புத் துறையில் புதுமை புரிந்தவர்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 2025 நிறைவு விழாவில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்கள் மற்றும் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கான மொழி பெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை வெளியிட்டார்.

மேலும், சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா தூதர் விருது, உலகளாவிய தொலைநோக்கு டிஜிட்டல் புத்தக கண்காட்சி சிறப்பு விருது, பண்டைய தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, நவீன தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, கூட்டு வெளியீட்டு கூட்டாண்மை விருது, பன்னாட்டு மானியக் குழுவின் சிறப்பு விருது, புத்தக ஊக்குவிப்பு விருது, உலகளாவிய இலக்கிய ஆதரவிற்கான விருது ஆகிய விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.

### ஏற்றமிகு வளர்ச்சி!

உலகைத் தமிழுக்கும்; தமிழை உலகுக்கும் (Bringing the World to Tamil; Taking Tamil to the World) என்ற உயரிய நோக்கத்தோடு கொண்டாடப்படும் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில், 2023ஆம் ஆண்டு 24 நாடுகள் பங்குபெற்று 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 2024ஆம் ஆண்டு 40 நாடுகள் பங்குபெற்று 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்டுதோறும் ஏற்றமிகு வளர்ச்சியினைக் கண்டு வரும் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா இந்த ஆண்டு, சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் 16.1.2025 முதல் 18.1.2025 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது.

இந்த ஆண்டு 60க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பதிப்புலக ஆளுமைகள் இப்புத்தகத் திருவிழாவில் கலந்து கொண்டுள்ளனர். ஆஸ்திரேலியா, பெனின், புருனே, பல்கேரியா, சிலி, சைப்ரஸ், எஸ்தோனியா, எத்தியோப்பியா, கானா, ஐவரி கோஸ்ட், ஜப்பான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், லக்ஸம்பர்க், மடகாஸ்கர், மொரிசியஸ், மெக்சிகோ, மங்கோலியா, மொராக்கோ, மொசாம்பிக், நேபாளம், நைஜீரியா, நார்வே, ROC (தைவான்), ருமேனியா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, இலங்கை, டோகோ, உக்ரைன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA), உஸ்பெகிஸ்தான், ஜிம்பாப்வே ஆகிய 34 நாடுகள் முதல் முறையாக பங்கேற்றுள்ளன. சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற இப்புத்தகத் திருவிழாவில், 78 அரங்கங்கள், குழந்தைகளுக்காக 3 சிறப்பு அரங்கங்கள் என 60க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றுள்ளன.

### 166 தமிழ் நூல்கள் 32 மொழிகளில் மொழிபெயர்ப்பு!

உலகெங்கும் நம் இலக்கியங்களை எடுத்துச்சென்று, தமிழ் மொழியின் சிறப்பினை பறைசாற்றும் வகையில், தமிழ்நாடு மொழி பெயர்ப்பு மானியமாக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. இதன் மூலம், கடந்த இரண்டாண்டுகளில், 166 தமிழ் நூல்கள் 32 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்படுவதற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு புகழ்பெற்ற பன்னாட்டுப் பதிப்பகங்களான ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டி பிரஸ்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### பொங்கல் பண்டிகை விடுமுறை முடிந்து ஊர் திரும்ப

## தமிழகம் முழுவதும் 5,290 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

*சென்னை, ஜன. 19 -*

*பொங்கல் பண்டிகையொட்டி விடுமுறைக்கு ஊர்களுக்கு சென்ற பொதுமக்கள், சென்னைக்கு திரும்ப ஏதுவாக 5,290 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளன. மேலும் கூட்ட நெரிசலை தவிர்க்க பயணத் திட்டங்களை மாற்றி இன்று (18.01.2025) முதல் பயணத்தை தொடங்குமாறும் போக்குவரத்துத் துறை அறிவுறுத்தியுள்ளது.*

*பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சொந்த ஊர்களுக்குச் செல்ல விரும்பும் மக்களுக்கு ஏதுவாக அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டிருந்தன.*

*இந்நிலையில், பொங்கல் பண்டிகை முடிந்ததை தொடர்ந்து சொந்த ஊர்களுக்குச் சென்ற பெரும்பாலானோர் நேற்று முன் தினம் முதல் சென்னைக்கு திரும்பி வரத் தொடங்கியுள்ளனர்.*

*இதையொட்டி பயணிகளின் வசதிக்காக ஜன. 15 முதல் ஜன. 19ம் தேதி வரை, சென்னைக்கு தினசரி இயங்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன் 5,290 சிறப்பு பேருந்துகளும், பிற ஊர்களி லிருந்து 6,926 பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன.*

*எனவே, பொதுமக்கள் தங்களது பயணத் திட்டங்களை மாற்றி பயணத்தை மேற்கொள்ளுமாறும் போக்குவரத்துத் துறை அறிவுறுத்தியுள்ளது.*

### அருந்ததியர் இட ஒதுக்கீடுச் சட்டம் அமல்படுத்தப்பட்டதால்

## அரசு கலைக் கல்லூரிகளில் அருந்ததியர் மாணவர்கள் சேர்க்கை அதிகரிப்பு!

### ஆய்வு அறிக்கையில் தகவல்!

**சென்னை, ஜன. 19 -**

**தமிழ்நாடு அருந்ததியர் இட ஒதுக்கீடு சட்டம் அமல்படுத்தப்பட்டதன் விளைவாக, மாநிலம் முழுவதும் அந்த சமூகத்தைச் சார்ந்த உயர் கல்வி பயிலும் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளது என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட பதில்கள் தெரிவிக்கின்றன.**

2009 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இயற்றப்பட்ட சிறப்புச் சட்டம், பட்டியலினத்தவர்களுக்கான 18% இட ஒதுக்கீட்டிலிருந்து அருந்ததியர்களுக்கு 3% இட ஒதுக்கீட்டை வழங்கியது. இதன் மூலம், கடந்த காலங்களை விட அருந்ததியினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் அரசு கலைக் கல்லூரிகளில் இளங்கலைப் படிப்புகளில் சேரும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்தச் சமூகத்தினர் அடர்த்தியாக வசிக்காத பகுதிகளிலும் கூட இந்த அதிகரிப்பு தெளிவாகத் தெரிகிறது.

### கரூர் மாவட்ட அரசு கல்லூரி!

உதாரணமாக, கரூர் மாவட்டம் தாந்தோணிமலையில் ஏறத்தாழ 60 ஆண்டு களாகச் செயல்பட்டு வரும் அரசு கலைக் கல்லூரியில், 1994-95 ஆம் ஆண்டில் 53 என்ற குறைந்த எண்ணிக்கையிலிருந்த அருந்ததியர் மாணவர்களின் எண்ணிக்கை, 2008-09 ஆம் ஆண்டில் 98 ஆக உயர்ந்தது.

தமிழ்நாடு அருந்ததியர் இட ஒதுக்கீடு சட்டம் செயல்படுத்தப்பட்ட முதல் ஆண்டில் மாணவர்களின் ஓரளவு அதிகரிப்பு பதிவாகியிருந்தாலும், அடுத்த ஆண்டே (2010-11) சேர்க்கை 234 ஆக உயர்ந்தது. அடுத்த 14 ஆண்டுகளில், அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து, 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் தலா 410 ஆக உயர்ந்தது. 1993-94 முதல் 2023-24 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் 5,112 அருந்ததியர் மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர். இந்தச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு இக்கல்லூரியில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 4,077 ஆகும்.

### புதுக்கோட்டை அரசு கலைக் கல்லூரியில் அதிகரிப்பு!

இது ஒன்றும் தனித்த உதாரணம் அல்ல,


THE HINDU

# More Arunthathiyar students in arts colleges after 2009 law

Implementation of the Tamil Nadu Arunthathiyar Reservation Act has resulted in an increase of students from the community pursuing higher education across the State, RTI responses show

T. Ramakrishnan
CHENNAI

A 2009 special law, enacted in Tamil Nadu to provide the Arunthathiyars with a 3% quota within the 18% reservation for the Scheduled Castes (SCs), has resulted in the admission of a greater number of students of this community to undergraduate courses at government arts colleges than in the past. The increase is evident even in areas not known for the concentration of this community.

For instance, the Go...

The legislation provides Arunthathiyars a 3% quota within the 18% reservation for the Scheduled Castes. REPRESENTATIVE IMAGE

jumped to 234. In the next 14 years, the number of admitted students rose steadily, touching the highest of 410 each during 2021-22 and 2022-23. From 1993-94 ...

...ween 1993 and 2008 was only five, which was in 2008-09. But, since 2014-15, the figure touched double digits, and the highest was 19 in 2020-21. Another ...

Understandably, the reception to the internal quota in the districts with a large presence of Arunthathiyars has been equally good, if not, better than in the rest. In the 56-year-old Namakkal Kavignar Ramalingam Government Arts College for Women in Namakkal, the annual intake between 1993 and 2009 varied from two in 1996-97 to 32 in 2008-09. Since the law came into force, there has been a steep rise, the highest being 131 in 2020-21. At another long-standing institution in the same district, Thiruvalluvar Government Arts College in Rasipuram, the ...

புதுக்கோட்டையில் உள்ள கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியை உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 1993 மற்றும் 2008க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் அதிகபட்சமாக ஐந்து அருந்ததியர் மாணவிகளே சேர்க்கப்பட்டனர். ஆனால், இந்தச் சட்டம் அமலான பிறகு, 2014-2015ம் ஆண்டில், இந்த எண்ணிக்கை இரட்டை இலக்கங்களைத் தொட்டது. மேலும் அதிகபட்சமாக 2020-21 இல் 19 மாணவிகள் சேர்க்கப்பட்டனர்.

### உள்ஒதுக்கீட்டிற்கான வரவேற்பு சிறப்பாக உள்ளது!

மற்றொரு உதாரணம் சென்னையில் உள்ள நந்தனம் கல்லூரி. அங்கு 1993 மற்றும் 2008க்கு இடைப்பட்ட 16 ஆண்டுகளில் ஒற்றை இலக்கத்திலிருந்த அருந்ததியர் மாணவர்களின் எண்ணிக்கை, அதிகபட்சமாக 2008ம் ஆண்டு அதிகபட்சமாக 19 ஆக உயர்ந்திருந்தது. 2009க்கு பிறகு, இந்த நிலை மாறியது. மாணவர் சேர்க்கை ஒற்றை இலக்கத்திலிருந்த 2009 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளைத் தவிர, மற்ற ஆண்டுகளின் அருந்ததியர் மாணவர்களின் எண்ணிக்கை இரட்டை இலக்கத்தில் இருந்தது. அதிகபட்சமாக 2014 இல் 39 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

அருந்ததியர்கள் அதிக அளவில் வசிக்கும் மாவட்டங்களில் உள் ஒதுக்கீட்டிற்கான வரவேற்பு மற்ற பகுதிகளை விட சிறப்பாக இருந்து வருகிறது. நாமக்கல்லில் 56 ஆண்டுகள் பழமையான நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் அரசு மகளிர் கலைக் கல்லூரியில், 1993 மற்றும் 2009க்கு இடையிலான வருடாந்திர சேர்க்கை 1996-97 இல் 2 என்ற நிலையிலிருந்து, 2008-09 இல் 32 வரை உயர்ந்தது. இந்தச் சட்டம் அமலுக்கு வந்ததிலிருந்து, அருந்ததியர் மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கை கணிசமாக உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக 2020-21 இல் 131 ஆக இருந்தது. அதே மாவட்டத்தில் உள்ள மற்றொரு பழமையான அரசு கல்லூரியான ராசிபுரத்தில் உள்ள திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில், 2011-12 முதல் எஸ்சி (அருந்ததியர்) மாணவர் சேர்க்கை படிப்படியாக உயர்ந்து வருகிறது. 2023-24 இல் 316 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

**‘தி இந்து’ நாளிதழ் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட கேள்விக்கு தமிழ்நாட்டில் உள்ள சுமார் 80 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அளித்த பதில்களை ஆராய்ந்ததிலிருந்து இந்த விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.**